## <u>சுருக்கம்</u>

மோட்டார் வாகனம் – திருவல்லிக்கேணி, சங்ககிரி, பெருந்துறை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்துத் அலுவலகங்களாக நிலை உயர்த்துதல்– ஆணை வெளியிடப் படுகிறது.

---

**உள் (போக்குவரத்து–7) துறை**

**அரசாணை (நிலை) எண்.967**          **நாள் 25–6–2007**

<u>படிக்க</u>

போக்குவரத்து ஆணையர், சென்னை, நேர்முகக் கடித எண்.2954/இ3/2007, நாள் 3–5–2007.

––––––

**<u>ஆணை:</u>**

சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, எல்லீஸ் ரோடு, அரசினர் தோட்டம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, மந்தைவெளி, ஆர்.ஏ.புரம் மற்றும் கோபாலபுரம் ஆகிய 10 நகரப் பகுதிகளை உள்ளடக்கி தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் திருவல்லிக்கேணி பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்தலாமெனவும், சங்ககிரி, தேவூர், மோரூர், பூலாம்பட்டி, கொங்கனாபுரம், தேவனாகவுண்டனூர் மற்றும் எடப்பாடி ஆகிய 7 பகுதிகளை உள்ளடக்கி தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் சங்ககிரி பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்தலாமெனவும், தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் பெருந்துறை பகுதி அலுவலகத்தை பெருந்துறை, திங்களூர், காஞ்சிக்கோயில், விஜயமங்கலம், ஊத்துக்குளி, சென்னிமலை, வெள்ளோடு, நசியனூர், செங்கப்பள்ளி, குன்னத்தூர் மற்றும் பல்லக் கவுண்டன்பாளையம் ஆகிய 11 பகுதிகளை உள்ளடக்கிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்தலாமெனவும், தக்கலை, திங்கள்சந்தை, குளச்சல், குழித்துறை, மணவாளக்குறிச்சி, குலசேகரம், களியக்காவிளை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய 8 பகுதிகளை உள்ளடக்கி தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் மார்த்தாண்டம் பகுதி அலுவலகத்தை, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக நிலை உயர்த்த ஓர் செயற்குறிப்பை போக்குவரத்து ஆணையர் அரசுக்கு அனுப்பியிருந்தார்.

2. போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் செயற் குறிப்பை அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்தது. பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், பொது மக்களின் நலன் கருதியும், திருவல்லிக்கேணி, சங்ககிரி, பெருந்துறை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி திருவல்லிக்கேணி, சங்ககிரி, பெருந்துறை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய பகுதி அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்த அரசு ஆணையிடுகிறது.

3. திருவல்லிக்கேணி வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிருவாகக் கட்டுப்பாட்டில் சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, எல்லீஸ்ரோடு, அரசினர்தோட்டம், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, மந்தைவெளி, ஆர்.ஏ.புரம் மற்றும் கோபாலபுரம் ஆகிய 10 நகரப் பகுதிகள் இடம் பெறும். சங்ககிரி வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டில் சங்ககிரி, தேவூர், மோரூர், பூலாம்பட்டி, கொங்கனாபுரம், தேவனாகவுண்டனூர் மற்றும் எடப்பாடி ஆகிய 7 பகுதிகள் இடம் பெறும். பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டில் பெருந்துறை, திங்களூர், காஞ்சிக்கோயில், விஜயமங்கலம், ஊத்துக்குளி, சென்னிமலை, வெள்ளோடு, நசியனூர், செங்கப்பள்ளி, குன்னத்தூர் மற்றும் பல்லக் கவுண்டன்பாளையம் ஆகிய 11 பகுதிகள் இடம் பெறும் மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டில் மார்த்தாண்டம், தக்கலை, திங்கள்சந்தை, குளச்சல், குழித்துறை, மணவாளக்குறிச்சி, குலசேகரம் மற்றும் களியக்காவிளை ஆகிய 8 பகுதிகள் இடம் பெறும்.

4. திருவல்லிக்கேணி, சங்ககிரி, பெருந்துறை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் தேவையான பணியிடங்கள் மற்றும் தொடரும் மற்றும் தொடராச் செலவினங்கள் விவரம் பின்வருமாறு:-

<u>தொடரும் செலவினம் ரூ.16,24,992/– (அ) ரூ. 16,25,000/–</u>

| வ. எண். | பதவியின் பெயர் | தற்போதுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | புதிதாக தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள விகிதம் ரூ. | சம்பளம் மற்றும் இதர படிகள் (12 மாதங்களுக்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | வட்டாரப் போக்குவரத்து அலுவலர் | –– | 1 | 8000–275–13500 | 2,00,760/– |
| 2 | நேர்முக உதவியாளர் | – | 1 | 6500–200–10500 | 1,62,480/– |
| 3 | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 | 1 | 1 | 6500–200–10500 | 1,62,480/– |
| 4 | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–2 | 1 | 1 | 5500– 175–9000 | 1.37,760/– |
| 5 | கண்காணிப்பாளர் | 1 | 1 | 5700-175-9200 | 1,40,160/– |
| 6 | கணக்கர் | - | 1 | 4000–100–6000 | 1,00,680/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | உதவியாளர் | 1 | 1 | 4000–100–6000 | 1,00,680/– |
| 8 | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் | 1 | 3 | 3200-85-4900 | 2,37,672/– |
| 9 | பதிவறை எழுத்தர் | 1 | – | 2610-60-3150-65-3540 | – |
| 10 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 2550–55–2660–60–3200 | 63,096/– |
| 11 | இரவுக் காவலர் | 1 | – | 2550–55–2660–60–3200 | –– |
| 12 | ஓட்டுநர் | –– | 1 | 3200–85–4900 | 79,224/- |
| 13 | கட்டட வாடகை | –– | –– | 15000x12 | 1,80,00/– |
| 14 | மின்சாரக் கட்டணம் | –– | –– | 3500x12 | 42,000/– |
| 15 | தொலைபேசி கட்டணம் | –– | –– | 1500x12 | 18,000/– |
| மொத்தம் | | 8 | 12 | | 16,24,992/- அல்லது 16,25,000/- |

(ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)

<u>தொடரா செலவினம் ரூ.8,57,000/–</u>

| வ. எண். | பொருள் | எண்ணிக்கை | தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஈப்பு (Jeep) | 1 | 1x4,50,000 | 4,50.000/– |
| 2 | அலுவலர் மேசை | 3 | 3x5000 | 15,000/– |
| 3 | கண்காணிப்பாளர்/ உதவியாளர் மேசை | 4 | 4x4000 | 16,000/– |
| 4 | நாற்காலிகள் | 10 | 10x500 | 5.000./ |
| 5 | இளநிலை உதவியாளர் மேசை | 4 | 4x4000 | 16,000./ |
| 6 | இரும்பு பீரோ மற்றும் இரும்பு அடுக்குகள் | 2 | 2x2500 | 5,000/- |
| 7 | கணினி | 6 | 6x30,000 | 1,80,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | ஏர்கண்டிஷனர் | 1 | 1x40,000 | 40,000/- |
| 9 | கணினி மேசை மற்றும் நாற்காலி | 6 | 6x2000 | 12,000/- |
| 10 | பணப் பெட்டி(Cash Chest) | 1 | 1x50,000 | 50,000/- |
| 11 | நிகரி (Xerox) | 1 | 1x50,000 | 50,000/- |
| 12 | தொலையச்சு(Fax) | 1 | 1x10,000 | 10,000/– |
| 13 | தொலைபேசி இணைப்பு | 1 | 1x3000 | 3,000/– |
| 14 | தீ தடுப்புச் சாதனம் | 1 | 1x5000 | 5,000/– |
| மொத்தம் | | | | 8,57,000/- |

(ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்)

5. புதியதாக நிலை உயர்த்தப்படவுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களான திருவல்லிக்கேணி, சங்ககிரி, பெருந்துறை மற்றும் மார்த்தாண்டம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டொன்றிற்கு தொடரும் செலவினம் ரூ.16,25,000/-மும் (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) தொடரா செலவினமாக ரூ.8,57,000/-மும் (எட்டு இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) ஆகமொத்தம் ரு.24,82,000/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எண்பத்திரண்டாயிரம் மட்டும்) வீதம் புதிதாக நிலை உயர்த்தப்படவுள்ள 4 வட்டாரப் போக்குவரத்து அலுவவலகங்களுக்கும் ஆக மொத்தம் ரூ..99,28,000/- (தொன்னூற்றொன்பது இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. எனவே, அலுவலக பணிக்களுக்கென ஆகமொத்தம் ரூ.99,28,000/–க்கு (ரூபாய் தொன்னூற்று ஒன்பது இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) செலவு செய்ய போக்குவரத்து ஆணையருக்கு அரசு அனுமதி வழங்குகிறது. மேலே அனுமதிக்கப்பட்ட தொடரா இனச் செலவினங்களுக்கான பொருட்களை எல்காட் (ELCOT) மற்றும் டான்சி (TANSI) நிறுவனங்கள் மூலம் தற்போதுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டுமென போக்குவரத்து ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி ஐந்தில் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினங்கள் அவைகளுக்குரிய கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>திருவல்லிக்கேணி, சென்னை</u>

“2041–00 வண்டிகள் மீது வரிகள்–001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது – AB வட்டாரப் போக்குவரத்து அதிகாரி உள்ளூர்”

ரூ.

பணியாளர் ஊதியம்

01 சம்பளங்கள் 13,85,000/–

(த.தொ.கு,2041 00 001 AB 0101)

05. அலுவலகச் செலவுகள்

01. தொலைபேசி கட்டணங்கள் 18,000/–

தொலைபேசி இணைப்பு 3,000/–

(த.தொ.கு.2041 00 001 AB 0512)

02. ஏனைய சில்லறைச் செலவுகள்

பணப்பெட்டி 50,000/–

(த.தொ.கு.2041 00 001 AB 0521)

03. மின் கட்டணங்கள் 42,000/–

(த.தொ.கு.2041 00 001 AB 0530)

05 அறைகலன்கள் (மேசை, நாற்காலி

இரும்பு பதிவு அடுக்ககம் தளவாடங்கள் 69,000/–

(த.தொ.கு.2041 00 001 AB 0558)

06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள்

01 வாடகை 1,80,000/–

(த.தொ.கு.2041 00 001 AB 0610)

19 இயந்திரமும் சாதனமும்

01 வாங்குதல் 45,000/–

பிரிண்டர், UPS, தீயணைப்புக் கருவி, குளிர்சாதனம்,
கள்ளநோட்டுகள் கண்டறியும் கருவி, கணினி ஒயரிங்,
ஜெனரேட்டர்

(த.தொ.கு.2041 00 001 AB 1913)

ஈப்பு (Jeep) 4,50,000/-

(த.தொ.கு.2041 00 001 AA 2110)

நிகரி (Xerox) 50,000/-

(த.தொ.கு.2041 00 001 AA 1915)

தொலையச்சு (Fax) 10,000/-

(த.தொ.கு.2041 00 001 AA 1915)

**J.A.** <u>போக்குவரத்துத் துறையில் கணினிவழி நிர்வாக சிறப்பு முயற்சிகள்</u>

76 கணினியும் துணைப்பாகங்களும்
01 வாங்குதல் 1,80,000/–
(து.தொ.கு.2041 00 001 JA 7616)

<u>வெளியூர்</u>

"2041–00 வண்டிகள் மீது வரிகள்–001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது – AC வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வெளியூர்"

பணியாளர் ஊ.தியம்
01 சம்பளங்கள் 41,55,000/–
(து.தொ.கு.2041 00 001 AC 0106)

05. அலுவலகச் செலவுகள்
01. தொலைபேசிக் கட்டணங்கள் 54,000/–

தொலைபேசி இணைப்பு 9,000/–
(து.தொ.கு.2041 00 001 AC 0510)

02. ஏனைய சில்லறைச் செலவுகள்
பணப்பெட்டி 1,50,000/–
(து.தொ.கு.2041 00 001 AC 0529)

03. மின் கட்டணங்கள் 1,26,000/–
(து.தொ.கு.2041 00 001 AC 0538)

05 அறைகலன்கள் (மேசை, நாற்காலி
இரும்பு பதிவு அடுக்ககம் தளவாடங்கள் 2,07,000/–
(து.தொ.கு.2041 00 001 AC 0556)

06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள்
01 வாடகை 5,40,000/–
(து.தொ.கு.2041 00 001 AC 0618)

19 இயந்திரமும் சாதனமும்
01 வாங்குதல் 1,35,000/–
பிரிண்டர், UPS, தீயணைப்புக் கருவி, குளிர்சாதனம், கள்ளநோட்டுகள் கண்டறியும் கருவி, கணினி ஒயரிங், ஜெனரேட்டர்
(த.தொ.கு.2041 00 001 AC 1911)

ஈப்பு (Jeep) 13,50,000/-
(த.தொ.கு.2041 00 001 AA 2110)

நிகரி (Xerox) 1,50,000/-
(த.தொ.கு.2041 00 001 AC 1915)

தொலையச்சு (Fax) 30,000/-
(த.தொ.கு.2041 00 001 AC 1915)

**<u>J.A. போக்குவரத்துத் துறையில் கணினிவழி நிர்வாக சிறப்பு முயற்சிகள்</u>**
76 கணினியும் துணைப்பாகங்களும்
01 வாங்குதல் 5,40,000/–
(த.தொ.கு.2041 00 001 JA 7616)

7. இது புதுப்பணி குறித்த செலவாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (BG-I) துறை தனியாக பிறப்பிக்கும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இருபடிகளில் அரசாணையின் நகலுடன் நிதித்துறைக்கு அனுப்பி வைக்கும்படி, போக்குவரத்து ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தினை முதல் துணை மானியக்கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு போக்குவரத்து ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.213 ADS (JR) நாள் 14–6–2007 மற்றும் அ.சா.கு.எண்.38563/சி.எம்.பி.சி/07 நாள் 13–6–2007 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.269 (இருநூற்று அறுபத்து ஒன்பது) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
போக்குவரத்து ஆணையர், சென்னை–5.
இணை போக்குவரத்து ஆணையர், சென்னை–23.
துணை போக்குவரத்து ஆணையர், திருநெல்வேலி / கோயம்புத்தூர் / சேலம்.
வட்டாரப் போக்குவரத்து அலுவலர், சென்னை (தெற்கு),
நாகர்கோவில் / ஈரோடு / மற்றும் சேலம்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை (தெற்கு)
கருவூல அலுவலர், நாகர்கோவில் / ஈரோடு / மற்றும் சேலம்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / சென்னை–35.
நிதி (வ.செ.பொ.II) / (உள்–1) / (சி.எம்.பி.சி), சென்னை–9.
உள் (அனைத்து போக்குவரத்து பிரிவுகள்), சென்னை–9.
போக்குவரத்து அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்